**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**

---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

-------------------------

**1:1 அபிப்பிராயம்**

----------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1:2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------------------

**1:2:1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

-------------------------------------------------------

நியம இலக்கம் 18 இன் பிரகாரம், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தற்போதும் பயன்படுத்தப்பட்டு வரும் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2010 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1:2:2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கணக்குகளிலிருந்தான விடுபாடுகள்**

-------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்**

------------------------------------------------------

(i) விற்பனை வருமானம் சேகரிக்கப்படுகையில் விற்பனைச் சேகரிப்பு கணக்கு விற்பனைக் கட்டுப்பாட்டுக் கணக்குடன் ஒப்பிடப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது மீளாய்வாண்டின் போது இணக்கம் செய்யப்படாத வரவு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 435,732 தொகை செலவு மீதிகள் இரண்டின் கூட்டுத்தொகையான ரூபா 1,387,730 இற்கு ஈடுசெய்யப்பட்டு ரூபா 951,998 தொகையான செலவு மீதி ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் எதிர்மறை மீதியாகக் காணப்பட்டது.

(ii) பதவியணிக் கடனின் கீழ் வரவு மீதிப் பெறுமதியான ரூபா 347,173 ஆனதுடன் இதில் செலவு மீதிப் பெறுமதியான ரூபா 16,368 தொகையாக குறைக்கப்பட்டதை அடுத்து வேறுபாட்டுத்தொகையான ரூபா 330,805 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. பதவியணிக்கு செலுத்தப்பட வேண்டிய மற்றும் அறவிடப்பட வேண்டிய சந்தர்ப்பங்களின் போது அவை தீர்க்கப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை இதற்குக் காரணமாகியிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட இருப்பு முரண் கணக்கில் ரூபா 99,099 தொகையான மீதி 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கம் செய்யப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பிடப்பட்டு தீர்க்கப்படுவதற்கு மற்றும் இணக்கம் செய்வதற்கு உள்ள இருப்பு முரண்கள் கணக்கின் மீதி ரூபா 126,652 ஆனதுடன் மீளாய்வாண்டின் போது நடைமுறைப் பொறுப்பு அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) ரூபா 39,641,361 தொகையான கடன்கொடுத்தோருக்கு உரித்தான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேலான கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 18,848,493 ஆனதுடன் இது மொத்தக் கடன்கொடுத்தோரின் 47.5% ஆகும்.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் தீர்க்கப்பட்டிராத முற்பணம் ரூபா 4,891,182 ஆனதுடன் ஐந்தொகையில் ரூபா 4,859,433 ஆகக் கடன்கொடுத்தோரின் பெறுமதி குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. பட்டோலைகள் மற்றும் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையிலான வேறுபாடு ரூபா 31,749 ஆகக் காணப்பட்டது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிராத முற்பணம் ரூபா 4,891,182 ஆனதுடன் இதில் ரூபா 2,549,263 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பணமாகும்.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகாமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், முதலியவற்றிற்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) நிதி அதிகாரச்சட்டத்தின் 13(8) உப பிரிவின் ஏ மற்றும் பீ பந்தி | 2009 ஆம் ஆண்டின் 13(7)(ஏ) அறிக்கை தொடர்பில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 177(i) | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறும் சகல பணமும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு சிட்டைகள் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது ரூபா ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை 03 நாட்கள் முதல் 21 நாட்கள் வரை காசாளரிடம் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி. 315, 316, 317 | சில்லறைக் காசாளரின் பொறுப்பில் இருந்த ரூபா 100,000 இற்கு மேலதிகமாக பெறப்பட்ட சகல பணமும் பாதுகாப்புடன் பெட்டகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிராததுடன் சராசரியாக ரூபா 150,000 அளவிலான தொகை பொறுப்பாளரின் மேசை இலாச்சியில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி 7 (2) (ஆ) ஆம் பிரிவு | பெறுமதி சேர் வரி அடுத்து வரும் மாதத்தின் முதலாவது கிழமைக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிராத |

காரணத்தினால் 2010 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 725,263 தொகையும் 2009 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 2,078,804 தொகையும் 2008 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 1,879,188 தொகையும் கூட்டுத்தாபனத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. தலைவரின் 2011 மே 13 ஆம் திகதிய கடிதத்தில் ரூபா 12 மில்லியன் தொகையான செலவிற்கு எதிரீடு செய்யப்படும் நோக்கில் இத் தொகை பிடித்து வைத்துக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் விளைவித்த ரூபா 92,128,005 தொகையான வரிக்கு முந்திய தேறிய இலாபமானதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 17,493,407 உடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 74,634,598 ஆல் அதிபரிப்பை காட்டுகிறது. பிரதான அச்சகத்தில் ரூபா 85,936,934 ஆலும் காகிதாதிகள் களஞ்சியத்தில் ரூபா 16,575,847 ஆலும் நானாவித வருமானம் ரூபா 1,469,428 ஆலும் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் அதிகரித்திருந்தமை நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பிற்குப் பிரதான காரணமாகியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2010 ஆம் ஆண்டின் வரிக்கு முந்திய தேறிய இலாபம் அதிகரிப்பு ரூபா 74,634,598 ஆகவும் கடன்பட்டோரின் பெறுமதி அதிகரிப்பு ரூபா 261,528,029 ஆகவும் காணப்பட்டது. இதன் பிரகாரம், விற்பனை வருமானத்தில் உள்ளடங்கியிருந்த கடன் விற்பனை பரஸ்பரம் உயர்ந்த பெறுமதியில் இருந்தது.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

காசுப் பாய்ச்சலின் பிரகாரம் கடந்த ஆண்டின் போது ரூபா 9,337,551 தொகையான மேலதிகப்பற்று மீதியுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் உள்ளவாறும் ரூபா 40,484,817 ஆன மேலதிகப் பற்று மீதியைக் கொண்டிருந்தது. இதன் பிரகாரம், ரூபா 49,822,368 ஆல் மீதி வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிப்பட்டது.

மக்கள் வங்கியின் சர்வதெசக் கிளையின் வங்கி மேலதிகப்பற்று மீதி 2010 ஆம் ஆண்டின் போது 2009 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 30,528,542 ஆல் அதிகரித்திருந்ததுடன் மக்கள் வங்கி ஹோமாகம கிளையில் ரூபா 5,053,033 தொகையான மேலதிகப்பற்று ஏற்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் விற்பனை பாரியளவில் கடனுக்கு நிகழ்ந்திருந்தமையாலும் கடன் அறவிடப்படும் முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும், உற்பத்திக்காக மூலப்பொருட்கள் கடனுக்கு எடுக்கப்பட்டிருந்தமையும் இவ்வாறு வங்கி மேலதிகப்பற்று அதிகரிப்பிற்குக் காரணமாகியிருந்தன. கடன் அறவிடப்படும் நோக்கத்திற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராத காரணத்தினால் வங்கி மேலதிகப் பற்றுக் கொடுப்பனவின் இயலுமை நலிவான நிலையில் காணப்பட்டது.

### 2.1.3 கடன் பயன்பாடு

**வங்கிக் கடன் தொகையில் அதிகரிப்பு**

உற்பத்தித் தேவைப்பாடுகளுக்காக மூலப்பொருட்களும் மூலதனச் சொத்துக்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்டிருந்த குறுங்கால வங்கிக் கடனில் காலரீதியாக அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 452,664,894 தொகையும் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 340,754,716 தொகையும் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 249,430,332 தொகையுமாக கடன் பெறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2010 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட கடன் பெறுமதி 32% ஆலும் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட கடன் பெறுமதி 81% ஆலும் அதிகரித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

**(I) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் 01 தடவை மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

**(II) பதவியணிக் கிரயம்**

நிறுவகத்தில் 08 பதவியணியினர் அமைச்சிற்கும் மேல்மாகாண சபைக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இவர்களில் 05 பதவியணியினருக்காக 2010 ஆம் ஆண்டின் போது சம்பளமாக ரூபா 667,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(III) மெதுவாக நகரும் இருப்பு**

ஜீஎஸ்எம் 60 கடதாசியில் அப்பியாசக் கொப்பிகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டு ஜீஎஸ்எம் 58 கடதாசியில் அப்பியாசக் கொப்பிகள் தயாரிப்பிற்காக கேள்வி கோரல்கள் குறைவடைந்த காரணத்தினால் 2008 ஆம் ஆண்டிற்கு முன்பில் இருந்து சேகரிக்கப்பட்டிருந்த ஜீஎஸ்எம் 58 கடதாசி உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு அளவிலான 376,514 அப்பியாசக் கொப்பிகள் களஞ்சியத்தில் தேங்கிக் காணப்பட்டது. அவை தூசி படிந்து நிறம் மாறி பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத நிலையில் இருக்கையில் 2010 ஆம் ஆண்டின் போதும் ஜீஎஸ்எம் 58 கடதாசியினால் அப்பியாசக் கொப்பிகள் அச்சிடப்பட்டிருந்தன.

**(IV) சந்தைப் போட்டிக்கு முகம்கொடுப்பதிலுள்ள நலிவுகள்**

---

வேறு தனியார் நிறுவகங்களினால் உற்பத்தி செய்யப்படும் ஜீஎஸ்எம் 56 கடதாசியினால் தயாரிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகளுக்கு நல்ல கேள்வி நிலவுவதனை சந்தை அவதானிப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஜீஎஸ்எம் 56 கடதாசியினால் தயாரிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகளுக்கு சந்தையை உருவாக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(V) நியமங்களுக்கு இணங்காத புத்தகத் தயாரிப்பு**

---

கொப்பிகளில் இணைப்புக் கம்பிகள் துருப்பிடித்து சில கொப்பிகள் மீள இணைப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தமையால் பழுதடைந்திருந்தமை போன்ற காரணங்களினால் பாடசாலைகளில் இருந்தும் கடைகளில் இருந்தும் ஏறத்தாழ 13,500 கொப்பிகள் மீள அனுப்பி வைக்கப்பட்டு களஞ்சியத்தில் தேக்கிவைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு தயாரிப்பு நியமம் குறித்து கவனம் எடுக்கப்படாது தரத்தில் குறைவான உற்பத்திகள் சந்தையில் வழங்கப்படுவதனால் கூட்டுத்தாபனத்தின் நற்பெயர் நீண்டகாலமாக நுகர்வோரின் வெறுப்பிற்கு உட்பட்டிருந்தமையும் இதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளுக்கு உள்ள கேள்வி வீழ்ச்சியடைவதைத் தவிர்க்க முடியாத காரணி என்பது அவதானிக்கப்பட்டது.

**(VI) பாடசாலை பாடவிதானப் புத்தக அச்சீட்டுக் கட்டளை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்காக ஒட்டுமொத்தப் பாடசாலை பாடவிதான புத்தகங்களின் அச்சிடல் 387 வகையானதுடன் இதில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் 133 வகை மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த அளவில் 34.37% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டின் போது

கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த புத்தக வகையின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் பிரதிகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாடசாலை பாடவிதானப் புகத்தகங்களின் அச்சீட்டுக் கட்டளை வழங்கப்படுகையில் கடந்த ஆண்டின் பாடவிதானப் புத்தகங்கள் குறித்த தினத்தில் அச்சிடப்பட்டு ஒப்படைக்கப்படுவது தொடர்பாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கருத்திற்கொள்ளும். எனினும் 2011 ஆம் ஆண்டிற்காக 2010 ஆம் ஆண்டின் போதும் அச்சீட்டிற்காக வழங்கப்பட்டிருந்த புத்தகங்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தினத்திற்கு ஒப்படைக்கப்பட முடியாதிருந்தது. 2008 ஆம் ஆண்டின் போது இன்வொயிஸ் பெறுமதியில் 11.5% ஆன ரூபா 75,122,382 தொகையும் 2009 ஆம் ஆண்டின் போது இன்வொயிஸ் பெறுமதியில் 1.2% ஆன ரூபா 6,245,689 தொகையும் முறையே தண்டப்பணமாகவும் தாமதக்கட்டணமாகவும் அறவிடப்பட்டிருந்தது.

## (VII) வடமேல் விசேட செயற்திட்டம் தோல்வியடைதல்

2006 ஆம் ஆண்டின் போது இச் செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட இருந்த ரூபா 3.3 மில்லியன் தொகையான மீதியை அறவிட்டுக்கொள்வதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

செயற்திட்டத்தில் ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பான சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக நிறுவகத்தினால் இற்றைவரை அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 சனவரி முதல் திசெம்பர் வரை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் இயந்திரம் செயற்பாடற்றிருந்த மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை 50,220 ஆனதுடன் இது பாதீட்டில் காண்பிக்கப்பட்ட 126,150 மணித்தியாலங்களுடன் ஒப்பிடப்படுகையில் 40% ஐ ஈட்டியிருந்தது.

மொத்த செயற்பாடற்ற மணித்தியாலங்களில் 37,139 மணித்தியாலங்கள் அதாவது மொத்த செயற்பாடற்ற காலப்பகுதியின் 74% வேலை இன்மையாலும், 5502 மணித்தியாலங்கள் (11%) இயந்திரம் பழுதடைந்த காரணத்தினாலும்,4020 மணித்தியாலங்கள் (8%) இயந்திர இயக்குனர்கள் இன்மையாலும் (No worker) ஏற்பட்டிருந்தன.

(iii) 2010 ஆம் ஆண்டின் போது 04 இயந்திரங்கள் முற்றாக விளைவற்றுக் காணப்பட்ட காரணத்தினால் உற்பத்தியில் கிடைக்கப்பெறாது போன அலகுகளின் பிரிவு ரூபா 24,912,500 உம் மதிப்பீட்டுக் காலப்பகுதியில் 60% முதல் 99% வரையான காலம் 08 இயந்திரங்கள் விளைவற்றிருந்த காரணத்தினால் உற்பத்தியில் கிடைக்கப்பெறாது போன அலகுகளின் எண்ணிக்கை 48,168,232 ஆகக் காணப்பட்டது.

(iv) லிதோ பகுதியில் காணப்பட்ட Pacer 3 இயந்திரம் செயலிழந்தமையால் விளைவற்றுக் காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனம் ஆரம்பம் முதல் இவ் இயந்திரத்தைத் திருத்துவதற்கு முடியாத நிலையில் உள்ளதாக கூட்டுத்தாபனத் தலைவர் 2011 மே மாதம் 13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிவித்திருந்தார்.

### 2.2.3 இணங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குறித்த காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிராமையால் ரூபா 58,208 தொகையான தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேல் மாகாண வருமானத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய புரள்வு வரி தாமதமான காரணத்தினால் ரூபா 3,500 தொகையான தண்டப்படத்தைச் செலுத்த வேண்டியிருந்தது.

### 2.2.4 வருடாந்தப் பாதீடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான மீதிகளுக்கும் இடையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஓர் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் இணக்கம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) இருப்புக் கட்டுப்பாடு